# தகவல்கள் சேகரித்தல்

## கனடாவிற்கு புதிதாக வருபவர்களின் தேவைகளை சிறந்த விதத்தில் பூர்த்தி செய்ய



அகதிகள் உள்ளிட்ட குடியேற வருபவர்கள், கனடாவில் குடியேறுவதற்கு கனடா பிரஜா உரிமை மற்றும் குடிவரவு (Citizenship and Immigration Canada / Citoyenneté et Immigration Canada (CIC)) உதவி செய்கின்றது. இதனைச் செய்வதற்காக, மொழிப் பயிற்சி, தொழில் ஆலோசனை போன்ற சேவைகளை புதிதாக வருபவர்களுக்கு வழங்குவதற்காக, கனடா எங்கிலும் உள்ள அமைப்புகளுக்கு நாங்கள் நிதி வழங்குகின்றோம். புதிதாய் வருவோர் சரியான சேவைகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு உங்களது உதவி எங்களுக்குத் தேவை.

உங்களுக்கு இந்தச் சேவைகளை வழங்கும், CIC ஊஜஊ-நிதிப்படுத்தும் அமைப்பு, உங்களிடம் உங்களது முழுப் பெயர், பிறந்த திகதி, குடிவரவு இலக்கம் அல்லது குடிவரவு ஆவணம் போன்ற குறிப்பிட்ட தனிநபர் தகவல்களை தரும்படி கேட்கும். கேட்கப்படும் பொழுது இந்தத் தகவல்களை வழங்குமாறு நாங்கள் உங்களைத் தூண்டுகின்றோம்.

உங்களைக் குடியேற்றும் அமைப்பு, இந்தத் தகவலை ஊஜஊ CIC க்கு வழங்கும். இந்த நடைமுறையின் போது உங்களது தகவலை நாங்கள் ரகசியமாக வைத்திருப்போம். உங்களது தனிப்பட்ட தகவல்கள், உங்களது அனுமதி இல்லாமல் வேறு எந்த நோக்கங்களுக்கும் உபயோகிக்கப்பட மாட்டாது. எந்த நேரத்திலும், இந்தத் தகவல்களை உங்களுக்குக் காட்டுமாறு உங்களது சேவை வழங்குநரிடம் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது.

### ஏன் தனிப்பட்ட தகவல்களை ஊஜஊ சேகரிக்கின்றது.

உங்களிடமும் மற்ற குடியேறுபவர்களிடமும் இருந்து பெறப்படும் தனிப்பட்ட தகவல்களை, சேவை வழங்கும் அமைப்புகள் சிறப்பாக இயங்குவதை நிச்சயப்படுத்தவும் அத்துடன் நாங்கள் நிதியளிகும் சேவைகளை என்ன விதத்தில் முன்னேற்றலாம் எனத் தீர்மானிப்பதற்கும் நாங்கள் உபயோகிக்கின்றோம். அத்துடன் எங்களது திட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை பொது மக்களுக்கு அறிவிக்கவும் நாங்கள் இதனை உபயோகிக்கின்றோம்.

எங்களது திட்டங்களையும் உங்களுக்கு வழங்கும் சேவைகளையும், திட்டமிடவும் நிர்வகிக்கவும், சேவை வழங்கும் அமைப்புகள் இந்தத் தகவல்களை உபயோகிக்கின்றன.

ஆகவே, உங்களது தேவைகளுக்குப் பொருத்தமாக சேவைகள் இருப்பதை உறுதிப்படுத்த, உங்களது தகவல்கள் எங்களுக்கு உதவும்.

### உங்களது தனிப்பட்ட தகவல்கள் பாதுகாக்கப்படும்

குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் *(Immigration and Refugee Protection Act / Loi sur l'immigration et la protection des réfugiés)* கீழ், CIC ஊஜஊ க்கு உங்களது தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்க அதிகாரம் இருந்தாலும், கனடா அந்தரங்கச் சட்டமானது உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க வேண்டுமெனக் கூறுகின்றது. அந்தரங்கச் சட்டம் *(Privacy Act / Loi sur la protection des renseignements personnels)* அனுமதித்திருப்பதைத் தவிர்த்து, உங்களது தகவல்களை பகிரமுடியாது. மேலதிகத் தகவல்களுக்கு http://laws-lois.justice.gc.ca/eng/acts/P-21/page-3.html#h-6. யை பார்க்கவும்.

நீங்கள் வழங்கும் தனிப்பட்ட தகவல்கள், குடியேற்றல் மற்றும் சமூகச்சேர்ப்பு சேவைகள் (Settlement and Integration Services / Services d'établissement et d'intégration) என அழைக்கப்படும் ஒரு வகையான

தகவல்களைப் பற்றி அறிய http://www.cic.gc.ca/english/department/atip/infosource/pibs.asp யை பார்க்கவும்

© Her Majesty the Queen in Right of Canada, represented by the Minister of Citizenship and Immigration, 2013



தகவல்தளமாகிய ஒரு தனிப்பட்ட தகவல் வங்கியில் சேமித்து வைக்கப்படும். நீங்கள் கனடாவிற்கு வர விண்ணப்பித்த போது, நீங்கள் வழங்கிய சில தகவல்களையும் அது உள்ளடக்கி இருக்கும். இந்த வங்கி, கனடா அரசாங்கத்திற்குச் சொந்தமானது. குடியேற்றல் மற்றும சமூகச்சேர்ப்பு சேவைகள் வங்கியில (PIB # CIC PPU 062), வைத்திருக்கப்படும் தனிப்பட்ட தகவல்களைப் பற்றி அறிய http://www.cic.gc.ca/english/department/atip/infosource/pibs.asp யை பார்க்கவும்.